## சமூர்த்தி நுண் நிதிய காகிதாகிகள் சுழல் நிதியதிதின் கொடுக்கல்வாங்கல் அறிக்கை - 2024

---

சமூர்த்தி நுண் நிதிய காகிதாகிகள் சுழல் நிதியம் தொடர்பாக 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் அமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு இணங்க பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற கம்பனி தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் அடங்குகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 15 இல் அடங்கியுள்ள நிதிப் பிரமாணம் 872(2)(ஈ) இற்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் செயலாற்றுகை அறிக்கையுடன் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 1.4 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமை

நிதியத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயம் | பெறுமதி ரூபா |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 33,198,564 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 134,519,860 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 167,718,424 |
| | |
| உரிமை மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை | 144,867,690 |
| **பொறுப்புக்கள்** | |

| | |
|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 22,850,734 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 167,718,424 |
| | |
| மொத்த வருமானம் | 13,336,957 |
| மொத்த செலவுகள் | 2,318,911 |
| **மிகை** | 11,018,046 |

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 381(1) | நிதியத்தின் நடைமுறைக் கணக்கிற்காக நிதிப் பிரமாணத்திற்கு இணங்க திறைசேரி அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | சட்டமா அதிபரின் அறிவுரை கிடைத்த பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 382 | 2024 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றின் படி 2017 ஜனவரி 30 முதல் 2024 ஏப்ரல் 26 திகதி வரை வைப்புச் செய்த போதிலும், தேறி இருக்காத பெறுமதி ரூபா 748,397 தொகைக்கான 15 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காசோலைகள் தொடர்பான தீர்த்தல் அலுவல்கள் ஒரு மாதத்தினுள் மேற்கொள்ளப்படும் என. | - மேற்படி - |
| | (iii) நிதிப் பிரமாணம் 383 | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றின் படி கூட்டுப் பெறுமதி ரூபா 26,499,906 தொகைக்கான நேர் அனுப்புதல்களை இனங்கண்டு காசேட்டில் பதிவு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. இந்த அனுப்புதல்களின் 2016 ஒக்தோபர் 05 திகதி முதல் 2023 திசெம்பர் 29 திகதி வரை பிரதேச அலுவலகங்களில் இருந்து நேர் அனுப்புதல்கள் | நேர் அனுப்புதல்கள் மற்றும் காசேடிடையே வித்தியாசத்தை விரைவாக சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | என வைப்புச் செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 6,625,681 தொகைக்கான 51 காசோலைகள் காணப்பட்டது. | | |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 15 இல் அடங்கிய நிதிப் பிரமாணம் 877(1)(இ) | வருடாந்தம் அடுத்த ஆண்டிற்கான பாதீடு அந்த நிதியத்தின் குறிக்கோளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியதுடன், அதன் பிரதியொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதிலும், அதன்படி, செயற்பட்டிருக்கவில்லை. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்று இன்றி மீளாய்வாண்டின் போது வங்கிக் காகிதாகிகள் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 58,907,945 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பாதீடு நிதிப் பிரிவிற்கு ஒப்படைத்த பின்னர் அந்தப் பிரிவினால் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) பிரிவு II இன் பந்தி 09 இல் அடங்கியுள்ள நிதிப் பிரமாணம் 880 | அரச பணங்களின் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக திணைக்களத் தலைவரினால் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல் தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், நிதியத்தின் பணம் மற்றும் இருப்புத் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் பிணைப் பணம் வைப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

### 3.1 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| காகிதாகிகள் அச்சிடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 58,907,945 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (அ) | 2024 பெப்ரவரி 12 திகதி காகிதாகிகள் அச்சிட்டுத் தரும் படி விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்தக் காகிதாகிகள் அச்சிடப்பட்டு களஞ்சியத்திற்கு கிடைப்பதற்கு 06 மாதத்திற்கு மிகையான காலம் கடந்திருந்தது. 2024 ஏப்ரல் 29 திகதி திறக்கப்பட்ட விலைகூறல் பதிவேடு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு 2024 மே 27 திகதி அரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்பட்டு 2024 ஜுலை 29 திகதி பெறுகைக் குழுவினால் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.3 இற்கு இணக்கமின்றி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரை வழங்குவதற்கு பெறுகைக் குழு 02 மாத காலம் எடுத்திருந்தது. | பெறுகை கருமங்களுக்காக கால தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.10 இன் பிரகாரம் குறிப்பிட்ட காலத்தினுள் ஒப்பந்த வேலை ஒப்படைக்கக் கூடியவாறு பெறுகை நிறுவனத்தினால் விலைகூறல்களை இணக்கஞ் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், ஒப்பந்த வேலை வழங்கல் தொடர்பான பரிந்துரைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பெறுகை அதிகாரியினால் தேவையான அனைத்து ஏனைய | அமைச்சினால் இந்த பெறுகைக் கோப்பு பரிசோதனை செய்வதற்காக வைத்திருந்ததால் இவ்வாறு தாமதம் ஏற்பட்டது என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு விலைகூறல் அழைப்புப் பதிவேடுகளில் 91 நாட்களுக்கான விதந்துரைக்கப்பட்ட செல்லும்படியாகும் காலமொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஏப்ரல் 29 திகதி விலைகூறலை திறந்து தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்பட்டு அறிவிப்பதற்காக சுமார் 03 மாதங்கள் எடுத்திருந்ததுடன், அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் 2024 ஆகஸ்ட் 06 திகதி 09 நாட்கள் கால தாமத்தின் பின்னரே கிடைத்திருந்தது. | | |
| (இ) | விலைகூறலுக்காக சுமார் 03 மாதங்களுக்கு முன்னர் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் விலைக் கழிவொன்றிற்காக இணக்கம் தெரிவிக்க முடியாதென விலைகூறல்தாரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இவ்வாறு பெறுகை செய்முறைக்காக நீண்ட காலம் எடுத்த காரணத்தினால் விரிவான மதிப்பாய்வொன்றுக்கு ஆளாக்கப்பட்ட விலைகூறுல்தாரர் இருவருக்கு இடையே கூடிய விலை சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரரை தெரிவு செய்தமையால் ரூபா 2,473,500 தொகை மிகையாக செலுத்தப்பட்டடிருந்தது. | | பெறுகை செய்முறை திட்டமிடப்பட்ட காலத்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 காகிதாகிகள் இருப்பு முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வங்கி நிதிப் பிரிவிற்காக பயன்படுத்தப்பட்ட 33 வகையான வங்கி காகிதாகிகள் இடையே அதாவது 08 விடயங்கள் | கணினிமயமல்லாத பாஸ் புத்தகங்களுக்காக சமூர்த்தி வங்கிகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற | தேவைப்பாட்டினை உரிய முறையில் மேற்கொண்டு பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அதாவது S9 - அங்கத்தவர் பாஸ் புத்தகங்கள் (கணினிமயம் அல்லாத), S10 – அங்கத்தவரல்லாத பாஸ் புத்தகங்கள்(கணினிமயம் அல்லாத), S11 – தொகுதி பாஸ் புத்தகங்கள்(கணினிமயம் அல்லாத) S12 கெகுலு பாஸ் புத்தகங்கள் (கணினிமயம் அல்லாத), S13 – திரியமாதா பாஸ் புத்தகங்ள் (கணினிமயம் அல்லாத), S47 – காசு பரிமாற்ற பேட், S53 – கட்டாய சேமிப்பு பாஸ் புத்தகங்கள், S 56 – சிரம சக்தி பாஸ் புத்தகங்கள் (கணினிமயம் அல்லாத) ஆகிய காகிதாகி வகைகள் 2024 ஆண்டின் போது அசையாத விடயங்கள் என களஞ்சியத்தில் காணப்பட்டது. | கேள்விகள் குறைவடைந்திருந்தன. |

### 3.3 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கு இணங்க 2019 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பந்தி 3.2 இன் கீழ் அடங்கியிருந்த கீழ்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்தி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சலுசல நிலையத்திற்கு சொந்தமான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிந்த காகிதாகிகள் இருப்பு 2010 ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக செலுத்தியிருந்த ரூபா 1,454,112 தொகைக்கான களஞ்சிய வாடகை வைப்பினை திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தத் தொகையை தீர்த்துக்கொள்வதற்காக தொடர்ந்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது அந்த பணம் சாட்டுதல் ஒன்று என தடுத்து வைத்திருந்த நிறுவனத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | பெற வேண்டிய தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் அச்சிடுவதற்காக அரச அச்சகத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 21,269,895 தொகை 04 | இந்த நிதியத்தின் இறுதிக் கணக்குகள் இறுதியாக தயாரித்திருந்தது 2019 ஆம் ஆண்டிலேயாகும். அதனால் அந்த பொறுப்புக்கள் தொடர்பான காசேடுகள் | மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டிருந்த இன்வொயிஸ்கள் உட்பட அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் பரிசோதனை செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |